# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2303 - 2022 ඔක්තෝබර් මස 21 වැනි සිකුරාදා - 2022.10.21**

*2303 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 280 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | 280 |
| நானாவித காணி அறிவித்தல்கள் | - |


**கவனிக்க**.- (i) உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்டமூலம் 2022, ஒற்றோபர் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) இலங்கை வரைதல் தொழினுட்பவியலர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2022, ஒற்றோபர் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2022, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

279 - B 082393 - 353 (2022/10)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

இணைப்பு 09

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப் பத்திரத்தினை இரத்துச் செய்தல் - (104) பிரிவிற்கான அறிவித்தல்

தென் மாகாணம் அம்பாந்தோட்டை மாவட்டம், வலஸ்முல்லை பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச செயலாளரான இந்திக்க ருவன் விதாரண ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களால் 1987.12.08 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள இல. ஹம்/பி 8371 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான ஹந்தபான்கலஅயின இல் வசிக்கும் சேனாநாயக்ககே டிங்கிஹாமியிடம் வழங்கி இல. 616 இன் கீழ் 1988.03.17ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்ட காணிக்கு அடுத்துறுபவர் ஒருவராக தோற்றுவதற்கு சட்டரீதியாக உரித்தாளர் ஒருவர் இல்லாத காரணமாக அல்லது உரித்தாளர் ஒருவர் இருந்தாலும் அவர் அடுத்துறுபவராக தோற்றுவதற்கு இணங்காமை காரணமாக அடுத்துறுபவர் ஒருவர் இல்லை என்பதாக அறிக்கையிடப்பட்டுள்ளதால் குறித்த அளிப்புப் பத்திரத்தினை மேற்குறித்த சட்டத்தில் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக இத்தால் அறியத்தருகிறேன்.

இது குறித்து ஏதுமொரு எதிர்ப்பு இருப்பின் அதை 2022.11.18ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் என்னிடம் அறிவிக்கப்படல் வேண்டும்.

### அட்டவணை

அம்பாந்தோட்டை மாவட்டம், வலஸ்முல்லை பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட வடக்கு கிருவா பற்று ஹில்லகேஅயின கிராம அலுவலர் பிரிவில் இ. கி. வ. 386 துண்டு இல. 125 ஆம் இலக்க 0.829 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய மிட்டிகோட்டேஹேன எனும் அரச காணி.

வடக்கு : துண்டு இல. 145 இலக்கமுடைய பிரவேசிக்கும் வீதியும்;
கிழக்கு : துண்டு இல. 126 இலக்கமுடைய காணித்துண்டும்;
தெற்கு : துண்டு இல. 145 இலக்கமுடைய பிரவேசிக்கும் வீதியும்;
மேற்கு : துண்டு இல. 124 இலக்கமுடைய காணித்துண்டாகும்.

ஐ. ஆர். கே. விதாரண,
பிரதேச செயலாளர்.

வலஸ்முல்ல,
2022.03.14.

10 - 250

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/70001
மாகாணக் காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: UPLC/L/26/KG/L/175.

## அரச காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

மொணராகலை மாவட்டம், கதிர்காமம் பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 146B தெட்டகமுவ கிராம உத்தியோகத்தர் பிரிவினைச் சேர்ந்த வள்ளிமலை கிராமத்தில் அமையப் பெற்றிருக்கும் 25 ஆம் இலக்க நில வரைபடத்தின் 1111 ஆம் இலக்கக் காணித் துண்டின் ஒரு பகுதியினைக் காட்டும் வகையில் குடியேற்ற அலுவலரினால் வரையப்பட்ட அண்ணளவான நில வரைபடத்தின் சுமார் 12 ஏக்கர், 01 றூட், 3.1 பேர்ச் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணியினை விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு நிலூஷான் குலுனு முத்துகமுவ என்னும் நபர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரப்படும் காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : முத்துகமுவவின் காணி;
கிழக்கு : பாதை, சத்துரிக்கா நதீஷானியின் காணி ;
தெற்கு : வனப் பாதுகாப்பு ஒதுக்கம்;
மேற்கு : பாதை, முத்துகமுவவின் காணி.

இக்காணியை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு விடப்படக்கூடியதாய் இருக்கின்றது. இதன்பொருட்டு அரசின் அனுமதிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகை காலம்** .- 30 வருடங்கள் (2022.10.05 இலிருந்து 30 வருடங்களுக்கு)

**வருடாந்த குத்தகைப் பணம்**.- 2022 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (5,000,000) குறைவாக இருக்கும் பட்டசத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் மாறுபடாத பெறுமதியின் 2% ஆகும். வரி அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (5,000,000) அதிகமாக இருக்கும் பட்டசத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் மாறுபடாத பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணம் ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது முடிவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டதானதாக இருத்தல் வேண்டும்.

தவணைக் கட்டணம்: தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரின் மூலம் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 1 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங் கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை விவசாய நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் / நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு விடப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2022.10.05 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை இடைவிடாது செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதிக்கக்கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு விடப்படும்.

டீ. டீ. நவோத்யா சீ கருணாரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகதமெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.10.18.

10 - 357

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.